

# TEMASEK BOND

**5 -ஆண்டுகால T2023-S$ முறி நிலையான வருடாந்தர வட்டி விகிதம் 2.70%**

**சில்லறை முதலீட்டாளர்கள் முதலீடு செய்யலாம்**

**S$1,000 முதல் தொடங்குகிறது**

**பொதுப் பங்குச்சந்தை வெளியீட்டுக்கு செவ்வாய்க்கிழமை அக்டோபர் 23, நண்பகல் 12 மணிக்குள் விண்ணப்பிக்க வேண்டும்**

மேல்விவரம் அறிய, அன்புகூர்ந்து கீழ்காணும் இணையத்தளத்திற்குச் செல்லுங்கள்
**temasek.com.sg/bondoffer**

**முக்கிய அறிவிப்பு: முறிகளில் முதலீடு செய்வதன் தொடர்புடைய இடர்கள்**

எல்லா முதலீடுகளுக்கும் இடர்கள் உண்டு. முறிகளில் செய்யும் முதலீடுகளும் இதில் உள்ளடங்கும்.

முறிகளில் முதலீடு செய்யும்போது, அடிப்படையில் நீங்கள் முறி வெளியீட்டாளருக்குப் பணம் கடனாகக் கொடுக்கிறீர்கள். ஆண்டுக்கு இருமுறை உங்களுக்கு வட்டி தரப்படும். அதோடு, முறி முதிர்ச்சியடையும்போது மூலதனத் தொகையும் முழுமையாகக் கிடைத்துவிடும்.[1]

கடமை தவறுதல், வட்டி விகிதம், பணமாக்கல் நிலை, பணவீக்க இடர்கள் போன்ற முக்கிய இடர்களை[2] முறி முதலீட்டாளர்கள் எதிர்நோக்குகின்றனர்.

முறி வெளியீட்டாளர் வட்டி செலுத்த அல்லது முதிர்ச்சியின்போது மூலதனத் தொகையைத் திருப்பிக்கொடுக்கத் தவறலாம். இதுபோன்ற கடமை தவறும் இடர்களும், வட்டி விகிதங்களும் வெவ்வேறு வெளியீட்டாளர்களிடையில் மாறுபட்டிருக்கும்.[1]

உங்கள் முறியை நீங்கள் எப்போது வேண்டுமானாலும் விற்கலாம். ஆனால் முறியின் சந்தை விலையில் ஏற்ற இறக்கங்கள் இருக்கலாம். நீங்கள் விற்கும்போது நிலவும் சந்தை விலை, நீங்கள் வாங்கிய விலையைவிடக் குறைவாக இருந்தால், உங்களது மூலதனத் தொகையில் ஒரு பகுதியை நீங்கள் இழக்கக்கூடும்.

உங்களுக்கு மேற்கொண்டு கேள்விகள் இருந்தால், அன்புகூர்ந்து முதலீடு செய்வதற்குமுன் நிதி அல்லது மற்ற நிபுணத்துவ ஆலோசனையை நாடுங்கள்.

## தெமாசெக் பற்றிய விவரம்

( 31 மார்ச் 2018 நிலவரப்படி)

சிங்கப்பூரைத் தலைமையகமாகக் கொண்ட உலகளாவிய முதலீட்டு நிறுவனமான தெமாசெக்,1974 -ல் ஒருங்கிணைக்கப்பட்டது. தெமாசெக்கின் S$308 பில்லியன் மதிப்புள்ள முதலீட்டுப் பட்டியலில் பற்பல நாடுகளும் பற்பல துறைகளும் உள்ளடங்குகின்றன.


தெமாசெக்கின் முதலீட்டுப் பட்டியலிலுள்ள நிறுவனங்களிலிருந்தும் நிதிகளிலிருந்தும் லாப ஈவுகளும் பகிர்ந்தளிப்புகளும் கிடைக்கின்றன. அதோடு, முதலீட்டுப் பட்டியலை மாற்றியமைக்கும்போது, முதலீடுகள் சிலவற்றிலிருந்தும் தெமாசெக் முதலெடுக்கிறது. இவையே தெமாசெக்கின் முதலீட்டு நிதியின் அடிப்படை மூலங்களாகும்.

### தெமாசெக்கின் கடன்கள்

தெமாசெக் அதன் தேவைகளுக்கும் சந்தை நிலவரங்களுக்கும் ஏற்ப இடையிடையே புதிய முறிகளை வெளியிடக்கூடும். எடுத்துக்காட்டாக, 1 ஆகஸ்ட் 2018 அன்று US$1.35 பில்லியன் மதிப்புள்ள முறிகளை தெமாசெக் வெளியிட்டது.


நீண்டகாலக் கடனுக்கும் குறுகியகாலக் கடனுக்கும் இடைப்பட்ட நிதியளிப்பு நீக்குப்போக்கை நிலைநாட்டும் வகையில் தெமாசெக் அதன் கடன்களைத் திட்டமிடுகிறது. 31 மார்ச் 2018 நிலவரப்படி, நீண்ட முதிர்ச்சிக்காலம் கொண்ட தெமாசெக் முறிகளுக்கு 11 ஆண்டுகளுக்கு மேலான மதிப்பிடப்பட்ட சராசரி முதிர்ச்சிக்காலம் இருந்தது. அதே சமயத்தில், குறுகிய முதிர்ச்சிக்காலம் கொண்ட யூரோ வர்த்தகப் பங்குப் பத்திரங்களுக்குச் சுமார் இரண்டு மாதகால மதிப்பிடப்பட்ட சராசரி முதிர்ச்சிக்காலம் இருந்தது.

தெமாசெக் கடந்த 11 நிதி ஆண்டுகளையும் கடனைவிட அதிக ரொக்கக் கையிருப்புடன் நிறைவு செய்தது.




**24 மடங்கு**
மொத்தக் கடனால் வகுக்கப்பட்ட நிகர முதலீட்டுப் பட்டியல் மதிப்பு

**நிலுவையிலுள்ள தெமாசெக் முறிகளின் முதிர்ச்சிக்கால விவரம்**





## கடன் தர நிலை

( 31 மார்ச் முடிவுற்ற ஆண்டுக்குரியது )


### முக்கிய கடன் விகிதங்கள்[3,4]

ஒரு முதலீட்டு நிறுவனமாக தெமாசெக்கின் நிதிநிலையை அடிப்படையாகக் கொண்ட முக்கிய கடன் தரக் குறியீடுகள் கீழே காட்டப்பட்டுள்ளன. வட்டி செலுத்தக்கூடிய, கடன்களை அடைக்கக்கூடிய எங்களின் ஆற்றலை இவை பிரதிபலிக்கின்றன. இந்த விகிதங்களைப் பொறுத்தவரை, பெருக்கல் மடங்கு எவ்வளவு அதிகமாக இருக்கிறதோ, அந்த அளவுக்குக் கடன் தரமும் அதிகமாக இருக்கும்.


**24 மடங்கு**
மொத்த கடனால் வகுக்கப்பட்ட நிகர முதலீட்டுப் பட்டியல் மதிப்பு




**24 மடங்கு**
வட்டிச் செலவினத்தால் வகுக்கப்பட்ட லாப ஈவு வருமானம்




**9 மடங்கு**
மொத்த கடனால் வகுக்கப்பட்ட பணமாக்கக்கூடிய சொத்துகள்[5]




### கடன் தர மதிப்பீடுகள்[6]

S&P Global Ratings மற்றும் Moody's Investors Service ஆகியவற்றிடமிருந்து முறையே **AAA/Aaa** ஒட்டுமொத்த நிறுவனக் கடன் தர மதிப்பீடுகளை தெமாசெக் பெற்றிருக்கிறது. தெமாசெக் முதன்முதலில் 2004 -ல் மதிப்பீடு செய்யப்பட்டது.

## உங்களுக்குத் தெரியுமா

**தெமாசெக் ஏன் முறிகளை வெளியிடுகிறது?**
தெமாசெக் ஒருவகை நிதிக் கட்டொழுங்காக 2005 முதல் நிறுவன, சான்றுபெற்ற மற்றும் குறிப்பிட்ட மற்ற முதலீட்டாளர்களுக்கு முறிகளை வெளியிட்டு வருகிறது. மற்ற முறிகளுடன் ஒப்புநோக்கையில், தெமாசெக் முறிகளின் சந்தை விலைகளில் ஏற்படும் ஏற்ற இறக்கங்கள், தெமாசெக்கின் கடன் தரத்தின் பொது சமிக்ஞைகளாகப் பயன்படுவது இதற்குக் காரணம். தனது முதலீடுகளுக்கு நிதியளிக்க முறிகளை தெமாசெக் சார்ந்திருக்கவில்லை. முதல்முறையாக, T2023-S$ தெமாசெக் முறி சில்லறை முதலீட்டாளர்களுக்கு வழங்கப்படுகிறது.

**வட்டி விகிதம் எவ்வாறு நிர்ணயிக்கப்பட்டது?**
இதுநாள்வரை, நிறுவன, சான்றுபெற்ற மற்றும் குறிப்பிட்ட மற்ற முதலீட்டாளர்களுக்கு ஏட்டுத்தொகுப்பு முறையின்மூலம் தெமாசெக் முறிகள் வழங்கப்பட்டுள்ளன. அதன்பிறகே இந்த சந்தை அடிப்படையில் விலை கண்டறியும் நடைமுறையைப் பயன்படுத்தி முறியின் வட்டி விகிதம் நிர்ணயிக்கப்பட்டது.

T2023-S$ தெமாசெக் முறிக்கான வட்டி விகிதமும் ஏட்டுத்தொகுப்பு முறையின்மூலம் நிறுவன, சான்றுபெற்ற மற்றும் குறிப்பிட்ட மற்ற முதலீட்டாளர்கள் ஆகியோரிடமிருந்து கிடைத்த முன்வைப்புகளின் அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்டது. பொதுப் பங்குச்சந்தை வெளியீட்டில் சில்லறை முதலீட்டாளர்களுக்கும் அதே வட்டி விகிதமே வழங்கப்பட்டது.

**T2023-S$ தெமாசெக் முறிக்கு தெமாசெக் உத்தரவாதம் அளிக்கிறதா?**
T2023-S$ தெமாசெக் முறியின் அனைத்து வட்டித் தொகைகளும், முதிர்ச்சியடையும்போது முழு மூலதனத் தொகையும் தரப்படுவதற்கு தெமாசெக் முழு உத்தரவாதமளிக்கிறது.

## நான் எப்படி விண்ணப்பம் செய்வது

**பின்வரும் வழிகளில் விண்ணப்பிக்க நீங்கள் CDP கணக்கு வைத்திருக்கவேண்டும்:**

தானியங்கி வங்கி இயந்திரங்கள்
- DBS அல்லது POSB
- OCBC
- UOB

இணைய வங்கிச்சேவை தளங்கள்
- DBS அல்லது POSB
- OCBC
- UOB

கைப்பேசி வங்கிச் செயலி
- DBS அல்லது POSB

### முக்கிய விவரம்

வெளியீட்டின் அளவு : S$400 மில்லியன் வரை (S$500 மில்லியன் வரையிலான அதிகரிப்புக்கு உட்பட்டது)

- வழங்கீடு : S$200 மில்லியன். நிறுவன, சான்றுபெற்ற மற்றும் குறிப்பிட்ட மற்ற முதலீட்டாளர்கள் S$250,000, அல்லது அதைவிட அதிகமாக S$250,000 வெள்ளிக்கணக்கிலான தொகைகளை முதலீடு செய்ய விண்ணப்பிக்கலாம்
- பொது வெளியீடு : S$200 மில்லியன் வரை. சிங்கப்பூரிலுள்ள சில்லறை முதலீட்டாளர்கள் S$1,000, அல்லது அதைவிட அதிகமாக S$1,000 வெள்ளிக்கணக்கிலான தொகைகளை முதலீடு செய்ய விண்ணப்பிக்கலாம்

வழங்கீட்டுக்கும் பொது வெளியீட்டுக்கும் இடையிலான இறுதி ஒதுக்கீடு மேற்காண்பதிலிருந்து மாறுபடக்கூடும்.

கூப்பன் விகிதம் : ஆண்டுக்கு 2.70% நிலையான விகிதம், ஆறு மாதங்களுக்கு ஒருமுறை செலுத்தப்படும்

காலகட்டம் : 5 ஆண்டுகள்

முதிர்ச்சியடையும் தேதி : முன்கூட்டியே மீட்கப்பட்டு ரத்து செய்யப்படாமல், அல்லது வாங்கப்பட்டு ரத்து செய்யப்படாமல் இருந்தால், முறிக்கான விதிகளிலும் நிபந்தனைகளிலும் உள்ளபடி, 25 அக்டோபர் 2023 அன்று முதிர்ச்சியடையும் என எதிர்பார்க்கப்படுகிறது

### முக்கிய தேதிகள்[7]

| | |
|---|---|
| செவ்வாய் 23 Oct | பொதுப் பங்குச்சந்தை வெளியீடு முடிவடையும் |
| புதன் 24 Oct | பொதுப் பங்குச்சந்தை வெளியீட்டுக்கு அளவுக்கதிக விண்ணப்பங்கள் கிடைத்திருந்தால் குலுக்கல் நடத்தப்படும். செல்லுபடியாகாத அல்லது ஒருபகுதி மட்டுமே ஏற்கப்பட்ட விண்ணப்பதாரர்களின் பணத்தைத் திருப்பித்தரும் நடவடிக்கை தொடங்கும். |
| புதன் 24 Oct | வெளியீட்டின் முடிவுகள் SGXNET-ல் அறிவிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது |
| வியாழன் 25 Oct | எதிர்பார்க்கப்படும் வெளியீட்டுத் தேதி |
| வெள்ளி 26 Oct | SGX-ST பங்குச்சந்தையில் பரிவர்த்தனை தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது |

மேல்விவரம் அறிய, அன்புகூர்ந்து 23 அக்டோபர் 2018, நண்பகல் 12 மணி வரை வாரத்தில் ஏழு நாட்களும் செயல்படும் பின்வரும் 24 மணிநேர நேரடித் தொலைபேசி சேவைகளில் ஏதேனும் ஒன்றை அழையுங்கள்.

| வங்கி | தொலைபேசி எண் |
|---|---|
| DBS அல்லது POSB | 1800 111 1111 (DBS) 1800 339 6666 (POSB) |
| OCBC | 1800 363 3333 |
| UOB | 1800 222 2121 |

இந்தப் பத்திரத்தை வெளியீட்டுச் சுற்றறிக்கை மற்றும் விலையீடு துணை அறிக்கை ஆகியவற்றுடன் சேர்த்துப் படிக்கவேண்டும்.[2]
இந்தப் பத்திரம், வெளியீட்டு சுற்றறிக்கை, விலையீடு துணை அறிக்கை ஆகியவற்றிலுள்ள தகவல், வேறுவிதமாகக் குறிப்பிடப்படாவிடில் அல்லது பொருளடக்கத்திற்கு வேறுவிதமான தேவைகள் இல்லாவிடில், அதனதன் தேதிப்படி படிக்கப்படவேண்டும். "தெமாசெக்" எனக் குறிப்பிடப்படும் இடங்களில், பொருளடக்கத்தின் தேவைப்படி, தெமாசெக் ஹோல்டிங்ஸ் (பிரைவெட்) லிமிடெட் (THPL), அல்லது THPL மற்றும் அதன் முதலீட்டு ஹோல்டிங் நிறுவனங்கள் கூட்டாகக் குறிப்பிடப்படுகிறது.

**அமெரிக்காவில் அல்லது அமெரிக்காவுக்குள் வெளியிடப்படாது அல்லது விநியோகிக்கப்படாது.** இந்தப் பத்திரத்திலுள்ள விவரம் முழுவதும் நிபந்தனைக்குட்பட்டு, முழுமையான வெளியீட்டுச் சுற்றறிக்கை மற்றும் விலையீடு துணை அறிக்கை ஆகியவற்றுடன் சேர்த்துப் படிக்கப்படவேண்டும். (இந்தப் பத்திரத்திற்கும் வெளியீட்டுச் சுற்றறிக்கை மற்றும் விலையீடு துணை அறிக்கை ஆகியவற்றுக்கும் இடையில் ஏதேனும் குழப்பநிலை, வேறுபாடு அல்லது விடுபாடு இருந்தால் சுற்றறிக்கையும் துணை அறிக்கையுமே மேலோங்கி இருக்கும்). இங்கு பெரிய எழுத்துகளில் பயன்படுத்தப்பட்டிருக்கும் சொற்றொடர்களுக்கு வெளியீட்டுச் சுற்றறிக்கையிலும் விலையீடு துணை அறிக்கையிலும் தரப்பட்டுள்ள அர்த்தங்களே பொருந்தும்.

முறிகளுக்குச் சந்தா சேர விரும்புவோர் வெளியீட்டுச் சுற்றறிக்கை, விலையீடு துணை அறிக்கை, முக்கிய பொருள் விவர அறிக்கை ஆகியவற்றை முழுமையாகப் படித்து, வெளியீட்டுச் சுற்றறிக்கையிலும் விலையீடு துணை அறிக்கையிலும் குறிப்பிட்டுள்ளபடி விண்ணப்பம் செய்யவேண்டும். இந்தப் பத்திரம் முதலீட்டு ஆலோசனை அல்ல, அந்த நோக்கம் கொண்டதும் அல்ல. முறிகளில் முதலீடு செய்வது பற்றி தீர்மானிப்பதற்கு உதவியாக உங்களது சொந்த முதலீட்டு, தொழில், சட்ட, வரி, நிதிநிலை மற்றும் இதர நிபுணத்துவ ஆலோசகர்களை நீங்கள் கலந்தாலோசிக்க வேண்டும். இத்தகைய முதலீடு உங்களது நிதி முதலீட்டு இலக்குகளுக்குப் பொருத்தமானதா என்பதை உங்கள் அனுபவம், இலக்குகள், நிதிநிலை, தேவையான இதர சூழ்நிலைகள் ஆகியவற்றின் அடிப்படையில் கவனமாகப் பரிசீலித்து தீர்மானித்த பிறகு மட்டுமே நீங்கள் முதலீடு செய்யவேண்டும். இந்தப் பத்திரம் தகவல் விளக்க அறிக்கை அல்ல, முறிகளைப் பெறுவதற்கு, வாங்குவதற்கு அல்லது சந்தா சேர்வதற்கு அழைப்பு விடுக்கவும் இல்லை. இந்தப் பத்திரத்தை வேறு எவருக்கும் அனுப்பி வைக்கவோ அல்லது விநியோகிக்கவோ கூடாது, எந்த வகையிலும் மறுபதிப்பு செய்யவும் கூடாது. இந்தப் பத்திரம் அமெரிக்காவில் அல்லது வெளியீடு அனுமதிக்கப்படாத வேறு நாட்டில் அல்லது சட்டப்படி வழங்கப்படக்கூடாத ஒருவரிடம் பங்குப்பத்திரங்கள் விற்பதற்கானதல்ல. 1933 -ஆம் ஆண்டு அமெரிக்கப் பங்குப்பத்திரச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்படாத அல்லது திருத்தத்தின்படி, பதிவிலிருந்து விலக்கு பெற்ற நிலையில், முறிகள் அமெரிக்காவில் வெளியிடப்படவோ அல்லது விற்கப்படவோ கூடாது. பரிந்துரைக்கப்படும் வெளியீட்டின் எந்தப் பகுதியையும் அமெரிக்காவில் பதிவு செய்ய அல்லது புழங்க எண்ணமில்லை. அமெரிக்காவுக்கு வெளியிலுள்ள அமெரிக்கர் அல்லாதவர்களுக்கு மட்டுமே முறிகள் வெளியிடப்படுகின்றன அல்லது விற்கப்படுகின்றன.

1 இது வெளியீட்டுச் சுற்றறிக்கையின் அல்லது விலையீடு துணை அறிக்கையின் ஒரு பகுதியல்ல, பொதுவான விவரமாக மட்டுமே வழங்கப்படுகிறது.
2 மற்ற முக்கிய இடர்களின் விளக்கத்தை அறிய வெளியீட்டுச் சுற்றறிக்கையில் இடம்பெறும் "இடர் காரணிகள்" பகுதியைப் பார்க்கவும். "நோட்டுகளின் கட்டணப் பொறுப்புகளை நிறைவேற்றுவதற்கு வெளியீட்டாளரிடம் மற்றும்/அல்லது உத்தரவாதம் அளிப்பவரிடம் போதுமான ரொக்கப் புழக்கம் இருக்கும் என்பதற்கு எந்தவித உத்தரவாதமும் இல்லை" என்ற இடர் காரணியும் இதில் உள்ளடங்கும்.
3 ஒரு முதலீட்டு நிறுவனமாக தெமாசெக்கின் கடன் தரக் குறியீடுகளை அடிப்படையாகக் கொண்ட எளிமைபடுத்தப்பட்ட படவிளக்கங்கள் இவை. 31 மார்ச் 2016, 2017, 2018 தேதிகளில் முடிவுற்ற ஆண்டுகளில் தெமாசெக் கடன் தர நிலையின் விளக்கமறிய, தயவுசெய்து வெளியீட்டுச் சுற்றறிக்கையின் "தெமாசெக்கின் தொழில் - கடன் தர நிலை" பகுதியைப் பார்க்கவும்.
4 ஒரு முதலீட்டு நிறுவனமாக தெமாசெக்கின், அதாவது தெமாசெக் ஹோல்டிங்ஸ் (பிரைவெட்) லிமிடெட் (THPL) மற்றும் அதன் முதலீட்டு ஹோல்டிங் நிறுவனங்கள் (IHCs) ஆகியவற்றின் நிதி விவரங்களின் அடிப்படையிலானது. (IHCs) என்பன THPL-ன் நேரடியான மற்றும் நேரடியற்ற முற்றிலும் சொந்தமான துணை நிறுவனங்களாகும். இவற்றின் இயக்குநர் சபை அல்லது நிகரான ஆளுமை அவைகளில் THPL, முற்றிலும் சொந்தமான தெமாசெக் பிரைவெட் லிமிடெட் (TPL) மற்றும்/அல்லது TPL-ன் முற்றிலும் சொந்தமான துணை நிறுவனங்கள் ஆகியவற்றின் ஊழியர்கள் அல்லது பிரதிநிதிகள் உள்ளடங்குவர். THPL மற்றும் அதன் IHCs ஆகியவற்றின் அடிப்படை நடவடிக்கைகள் முதலீட்டு ஹோல்டிங், நிதியளிப்பு மற்றும்/அல்லது முதலீட்டு ஆலோசனையும் ஆலோசனை சேவைகளும் வழங்குதல் ஆகியன.
5 பெரும்பாலும் ரொக்கம், ரொக்கச் சமன்கள், மற்றும் பங்குச்சந்தையில் பட்டியலிடப்பட்ட நிறுவனத்தில் தலா துணை-20% பங்கு உரிமையைப் பிரதிநிதிக்கும் முதலீடுகள்.
6 கடன் தர மதிப்பீடுகள் கருத்துரை மட்டுமே, முறிகளை வாங்க, விற்க அல்லது வைத்திருக்க செய்யப்படும் பரிந்துரை அல்ல என்பதால், கடன் தர மதிப்பீடுகள் சில்லறை முதலீட்டாளர்களின் பயன்பாட்டுக்கானவை அல்ல, இந்த மதிப்பீடுகளைக் கருத்தில் கொண்டு சில்லறை முதலீட்டாளர்கள் எந்தவொரு முதலீட்டுத் தீர்மானமும் எடுக்கக்கூடாது. முதலீட்டாளர்கள் தங்களது நிதி அல்லது மற்ற நிபுணத்துவ ஆலோசகருடன் தொடர்பு கொண்ட பிறகே கடன் தரமதிப்பீடுகளின் அடிப்படையில் தீர்மானங்களை எடுக்கவேண்டும்.
7 கால அட்டவணை உத்தேசமானது மட்டுமே, மாற்றத்திற்கு உட்பட்டது. கால அட்டவணையில் செய்யப்படும் மாற்றங்களை SGX-ST இணையத்தளத்தில் தெமாசெக் பகிரங்கமாக அறிவிக்கும்.

TEMASEK